
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1301**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

**78**

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

வழிநடத்திக்கொண்டிருக்கும் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் ஆவர். அவர்களுக்கு அடித்தளமாக இருப்பது, திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக அடித்தளமிட்ட சுயமரியாதை இயக்கம் ஆகும். இந்த அடித்தளம், இந்தியாவில் வேறெந்த அரசியல் கட்சிக்கும் இல்லை; அதனால்தான் அவர்களால் மதத்தைத் தாண்டி சிந்திக்க இயலவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கும் இந்த உளவியலைப் பொதுக்கருத்தாக, ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்தையும் ஏற்கவைத்திருக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மை. அதனால், மற்ற மாநிலங்களில் இஸ்லாமியர்கள்மீது மிக எளிதாகச் சூட்டப்பட்டுவிடுகிற தீவிரவாத முத்திரையைத் தமிழ்நாட்டில் ஒருபோதும் சூட்ட முடிவதில்லை. அந்த அடையாளத்தை எவர் சூட்டினாலும், தமிழர்கள் ஏற்கவும் மாட்டார்கள். இப்படியொரு பொதுப்புத்தியை உருவாக்கி, நல்லிணக்க பூமியாகத் தமிழ்நாட்டை வார்த்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கி,

மாறிவிட்டது. இவற்றிற்குப் பின்பு, பல வட இந்திய மாநிலங்களில் முஸ்லிம்களின் பாதுகாப்பு, குடியிருப்பு, சொத்து, வாழ்வாதாரம், அரசியல் பிரதிநிதித்துவம், சமூகப் பங்கேற்பு ஆகியவற்றில் நீண்டகாலத் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. முஸ்லிம் அடையாளத்துடன் ஒருவர் சாலையில் நடந்துசென்றால்கூட, அவர் மீதான பார்வையை மாற்றியவை இச்சம்பவங்கள் ஆகும். குறிப்பாக, ஒவ்வொரு வன்முறைக்குப் பிறகும் பாதுகாப்பு அச்சத்தால் பல முஸ்லிம் குடும்பங்கள், இந்துக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளுக்குத் திரும்ப முடியவில்லை; வீடு, வேலை, குழந்தைகளின் பள்ளி ஆகியவற்றிலும் கடும் பாதிப்பு ஏற்பட்டது.

அவர்களின் வாழ்வாதார மீட்டுருவாக்கத்திற்கு எந்தவோர் அரசும் துணைநிற்கவில்லை. ஆனால், கலவரத்தில் முன்னின்ற எதிர் முகாம்தாரர்கள் அரசியல் அதிகாரங்களை எட்டிப்பிடிக்க, இம்மோதல்கள் பேருதவி புரிந்தன.

தமிழ்நாட்டில் அப்படியொரு அச்சத்திற்குள்

# அவதூறாளர்கள், அம்பலமாவார்கள்!



**மை**னாரிட்டி தி.மு.க. தொடரின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இஸ்லாமியர்களுக்குமான பந்தத்தைக் கடந்த 76 வாரங்களாகப் பல்வேறு பின்னணியில், இந்தத் தொடரில் அலசியிருக்கிறோம். இஸ்லாமியர்களுக்குத் தி.மு.க. கொடுத்தது, வெறும் திட்டங்களையும் சாதனைகளையும் மட்டுமல்ல; அவற்றை வெறுமனே எண்ணிக்கையில் சொல்லிவிட்டுக் கடந்து சென்றுவிட முடியாது. திராவிட முன்னேற்றக் கழகம் இஸ்லாமியர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருப்பது, சமூகப் பாதுகாப்பும் வாழ்வாதார அங்கீகாரமும் ஆகும். இந்தியச் சூழலைப் பொறுத்தவரையில், இந்த இரண்டையும் வெறும் திட்டங்களால் மட்டும் எவராலும் தந்துவிட முடியாது. இதைக் கொடுக்க மனிதநேயம் வேண்டும்; அதுவும் மதத்தைக் கடந்து சிந்திக்கக்கூடியதாக, அக்கறை காட்டக்கூடியதாக அந்த மனிதநேயம் இருக்க வேண்டும்.

அத்தகைய மனிதநேயத்தை மற்றெந்தக் கட்சிகளையும்விட இஸ்லாமியர்களின் மீது அதிகம் காட்டிய இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். அதற்குக் காரணம், இந்த இயக்கத்தைத் தோற்றுவித்த பேரறிஞர் அண்ணாவும், இந்த இயக்கத்தை அரை நூற்றாண்டுக்காலம் தாங்கி நின்ற முத்தமிழறிஞர் கலைஞரும், இன்றைக்கு இயக்கத்தை

ஓர் அபாண்ட பழியைச் சட்டமன்றத்தில் சுமத்தியிருக்கிறார், த.வெ.க. உறுப்பினர் முஸ்தபா என்கிற மதார் பதுருதீன்.

அவதூறுகளை வீசுவதுதான் அவர்களுக்குத் தெரிந்த ஒற்றை அரசியல். அதைத்தான் அவரும் செய்திருக்கிறார் என்றாலும், நேரெதிர் முரணான அப்பொய்யை உடைக்க வேண்டியது அவசியம். தி.மு.கழக உறுப்பினர்கள் மட்டுமல்ல, ஜவாஹிருல்லா, தமீமுன் அன்சாரி போன்ற கூட்டணிக் கட்சித் தலைவர்களும் பதிலடி கொடுத்து, முஸ்தபாவின் முகத்திரையைக் கிழித்திருக்கிறார்கள்.

‘பாபர் மசூதி இடிப்பு’, ‘கோத்ரா கலவரம்’, ‘முசாபர் நகர் கலவரம்’ போன்றவற்றுக்குப் பின்பு, வட மாநிலங்களின் அரசியல் சூழலே

> **இஸ்லாமியர்களுக்கு எதிராக தி.மு.க.வை நிறுத்தும் முயற்சியை அரசியல் ஆதாயம் தேடுவோர் செய்யலாம். ஆனால், அந்த முட்டாள்தனங்களை எல்லாம் நம்புகிற இடத்தில் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் இல்லை.**

இஸ்லாமியர்களைத் தள்ளாமல் காத்து நின்ற இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்தப் பாதுகாப்பு தி.மு.கழகத்திடம் இருந்து உறுதியாக வெளிப்பட்டது. அதை உணர்ந்தவர்கள் எவரும் தி.மு.கழகத்தின்மீது இப்படியொரு குற்றச்சாட்டை அரசியலுக்காகக்கூட வைக்க மாட்டார்கள். ஆனால், த.வெ.க.வினரிடம் அத்தகைய நேர்மையை எல்லாம் கனவிலும் எதிர்பார்க்க முடியாது என்பதுதான் 3 மாதங்களில் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு உணர்த்தியிருக்கும் பாடம்.

ஆனால், தி.மு.கழகத்தை நோக்கி இப்படியொரு குற்றச்சாட்டை வைத்திருக்கும் முஸ்தபாவின் தலைவர் யார், அவர் இஸ்லாமியர்களை எப்படி நடத்தினார் என்பதை முதலில் சிந்திக்க வேண்டும். அவர் நடித்த திரைப் படங்கள் சிலவற்றில் இஸ்லாமியர்களைத் தீவிரவாதிகளாகச் சித்திரித்தவர் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. சினிமாவுக்கு அப்பால் அரசியலுக்கு வந்துவிட்ட பிறகாவது இஸ்லாமியர்கள் நலனில் விஜய்யிடம் அக்கறை வெளிப்பட்டதா?

திருப்பரங்குன்றம் விவகாரத்தில், *‘we’ll face the consequences’* என நெஞ்சை நிமிர்த்தி கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நின்றபோது, அதுகுறித்து கருத்தே வெளிப்படுத்தாமல், பா.ஜ.க.வுக்கு அஞ்சி, கோழைத்தனமாக நடந்துகொண்டவர், விஜய். இன்றைக்கு ஆட்சியில் இருக்கும்போது, அந்த வழக்கைக்கூட ஒழுங்காக நடத்தாமல் கைவிட்டுவிட்டது இந்த அரசு. ஆனால், தி.மு.கழகத்தின்மீது அவதூறுச் சேற்றை வீசுகிறார்.

அதேபோல, இஸ்லாமியச் சமூகம் அடைந்த சமூக-அரசியல் நன்மைகளிலேயே மிக முக்கியமானது, 3.5% பிரத்யேக உள்ஒதுக்கீடு ஆகும். வக்ஃபு வாரியம், உலமாக்கள் வாரியம், உருது அகாடமி, டாம்கோ, காயிதே மில்லத் மணிமண்டபம், உமறுப்புலவர் மணிமண்டபம் என இஸ்லாமியர்களுக்காக தி.மு.கழகம் செய்தவை அனைத்தையும் ஏற்கெனவே விரிவாகப் பதிவுசெய்திருப்பதால், அவற்றை மீண்டும் விவரிக்க வேண்டியதில்லை. திட்டங்களை மட்டுமல்ல, அவற்றினால் விளைந்த சமூகப் பயன்களையும் சேர்த்தே ஆராய்ந்திருக்கிறேன்.

இஸ்லாமியர்களுக்கு தி.மு.க. எதுவும் செய்யவில்லை என்று, இஸ்லாமியர்களுக்கு எதிராக தி.மு.க.வை நிறுத்தும் முயற்சியை அரசியல் ஆதாயம் தேடுவோர் செய்யலாம். ஆனால், அந்த முட்டாள்தனங்களை எல்லாம் நம்புகிற இடத்தில் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் இல்லை. அவர்களின் இதயத்தில் தி.மு. கழகம் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கிறது. அவதூறு வீசுவோர் ஏற்கெனவே பாதி அம்பலப்பட்டவர்கள்தான்; முழுமையாக அம்பலமாகும் காலமும் தொலைவில் இல்லை.

**...நீளும்**

## ‘நீட்’ தேர்வு, இ.டபிள்யூ.எஸ்.(EWS) எதிர்ப்பு கையெழுத்து இயக்கம்!

‘நீட்’ தேர்வு அநீதியானது என்பதை தமிழ்நாடு நன்கறியும். அந்தத் தேர்வின் முறைகேடுகள் தொடர்ச்சியாக அம்பலமாகி வருகின்றன.

‘வினாத்தாள் கசிவு’, ‘தொழில்நுட்ப மோசடிகள்’ மற்றும் ‘தேர்வு மைய முறைகேடுகள்’ போன்ற பல்வேறு சர்ச்சைகள் ‘நீட்’ தேர்வின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கி உள்ளன. தவிர, ‘நீட்’ தேர்வினால் மாணவர்களின் சம வாய்ப்பு பாதிக்கப்படுகிறது. ஏழை, கிராமப்புற, அரசுப் பள்ளி மற்றும் சமூக ரீதியாகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தனியார் பயிற்சி நிறுவனங்களின் லாபத்துக்கு மட்டுமே வழிவகுக்கிறது.

தவிர, மருத்துவ மாணவர் சேர்க்கை மாநில அரசுகளின் கல்வி உரிமையுடன் தொடர்புடையது. ஆனால், ஒன்றிய அரசின் தேர்வு முகமை நடத்தும் ‘நீட்’ தேர்வு, மாநிலங்களின் அதிகாரத்தைக் குறைக்கிறது. இப்படி, மாணவர்களின் மருத்துவக் கல்வி உரிமையைக் கேள்விக்குறியாக்கியுள்ள இந்த ‘நீட்’ தேர்வுக்கு எதிராக, தமிழ்நாடு தொடர்ந்து போராடி வருகிறது. இவற்றை வலியுறுத்தி, திராவிட மாணவர் கழகம், திராவிடர் கழக இளைஞர் அணி, திராவிட மகளிர் பாசறை அமைப்புகளின் சார்பில் இணையவழி கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

‘நீட்’ தேர்வு, இ.டபிள்யூ.எஸ். (EWS) எதிர்ப்புப் பரப்புரையின் ஒரு பகுதியாகத் தொடங்கப்பட்டுள்ள இந்தக் கையெழுத்து இயக்கத்தில், தங்கள் பெயரையும் பதிவுசெய்ய, இந்த கியூ ஆர் கோடை ஸ்கேன் செய்யவும். சமூக நீதிக்குக் குரல்கொடுக்கும், இந்தக் கையெழுத்து இயக்கத்தில் பதிவுசெய்வது நம் கடமை.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரிடம் ‘ஆட்டோகிராஃப்!’



பாலசுப்பிரமணியன்

2015-ஆம் ஆண்டு, நம் கழகத் தலைவர் அவர்கள், ‘நமக்கு நாமே’ பிரச்சாரப் பயணத்தில், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். ஆனைமலை ஒன்றியத்துக்கு வருகைதந்த அவரை, ஒன்றியச் செயலாளர் தேவசேனாதிபதி இல்லத்தில் சந்தித்தேன். அப்போது, மாவட்டப் பிரதிநிதியாக இருந்தேன். தலைவரைச் சந்தித்த நேரத்தில், என் இளைய மகன் பா.கதிரவன், அவரிடம் ‘ஆட்டோகிராஃப்’ பெற்ற படம். கழகமே என்றென்றும் எங்கள் உயிர்மூச்சு என்பதில் பெருமையாக உள்ளது.

**- பாலசுப்பிரமணியன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி, ஆத்துப்பொள்ளாச்சி, ஆனைமலை ஒன்றியம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### 1977-கருப்புக்கொடி!

1977-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 29, 30 ஆகிய நாட்களில், இந்திரா காந்தி தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டார். அவர் தமிழ்நாடு வரும்போது, கருப்புக்கொடி காட்டும் போராட்டத்தை முன்னெடுப்பதென 27-ஆம் தேதி கூடிய அவசர செயற்குழு முடிவுசெய்தது. மாவட்டக் கழகங்கள் ஒருங்கிணைந்து, சென்னை, திருச்சி, மதுரை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நான்கு இடங்களில் கருப்புக்கொடி காட்டுவதென முடிவுசெய்து, இந்த நான்கு இடங்களிலும் அந்தந்த மாவட்டச் செயலாளர்களும் தலைமையேற்று வழிநடத்துவர் என்றும் அறிவிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900